ஜநவிநோதிநி.

இல. 10.] அக்டோபர்மீ 1885. [புஸ்த. XVI.

பர்மாதேசத்தைப்பற்றிய சிலவிஷயங்கள்.

இப்போது நமது தேசத்தில் எவ்விடத்திலும் பர்மாதேசம் பர்மாதேசம் என்ற கூச்சலே அதிகமாகி அனைவரும் அத்தேசத்து வரலாற்றைக்கேட்க விருப்பம்கொண்டிருக்கிறார்கள்; ஆதலின் அதைப்பற்றி நாம் இங்கே சிறிது எடுத்து உரைப்போம். பர்மாதேசமானது இவ்விந்துதேசத்துக்குக் கிழக்கே பங்காளக் குடாக்கடலுக்கு அப்பால் ஆனும் ஸியம்முதலிய நாடுகளோடுசேர்ந்து ஒருதீபகற்பமாகிக் கீழ்த்திசையில் சீனதேசம்வரைக்கும் பரவியிருக்கின்றது. அந்த தேசம் பிராமியதேசம் என்று வடநூல்களில் பேர் கூறப்பட்டிருக்கிறது. பர்மாராஜ்யம் முற்காலத்திலே மிகவும் விஸ்தீரணமாயிருந்ததாயினும், அங்கிலேய துரைத்தனத்தார் அதில் பலவிடங்களை ஜயித்துக் கைப்பற்றிக்கொண்டதனால் இப்பொழுது அத்தேசத்தின் பரிமாணம் குறுகிப்போயிருக்கின்றது. அதன் மேலண்டையோரத்திலுள்ள ஆரக்கான் தேசமும் தெற்கிலுள்ள பெகுவும் அங்கிலேயர் கைப்பற்றியவைகள். பர்மாதேசம் சற்றேறக்குறைய விஸ்தீரணத்தில் வங்காளநாட்டுக்குச் சரியாயிருக்கின்றதாயினும் குடிவளம் 15-ல் ஒருபங்குக்கும் குறைவாயிருக்கின்றது. அத்தேசத்திலே கடலினின்றும் 800 மைல்தூரம்வரைக்கும் மரக்கலங்கள் செல்லத்தக்க ஐராவதியென்கிற மகாநதி ஒன்று பெருகுகின்றது. அத்தேசத்துக்கு மேற்கே மலைத்தொடர் ஒன்று அதற்கு எல்லையாகப் பரவியிருக்கின்றது; வடக்கே காடுகளும் மலைகளுமொழிய மற்றொன்றுமில்லை.

பர்மாதேசத்திலே யானைகள் மிகுதி; பெரியமரங்களைக் கீழே சாய்த்து இழுப்பதுமுதலிய வேலைகளுக்கும் யானைகளை உபயோகப்படுத்துகிறார்கள். அத்தேசத்திலே வெள்ளையானைகளும் சிலவுண்டு, அவற்றை அத்தேசத்தார் மிகவும் மேலாய் அரசனுக்கு இரண்டாவதாகக் கொண்டாடுகின்றனர். குதிரைகள் வடிவத்தில் சிறுத்தவையாயினும் மிகுந்த வலிமையும் சுறுசுறுப்புமுடையவைகள். இத்தேசத்தில் பைகோமட்டம் என வழங்குகிறார்களே, அக்குதிரைகள் யாவும்

அத்தேசத்தவைதாம். காடுகளில் ஒற்றைக்கொம்பும் இரட்டைக் கொம்பும் உடையவையான கட்கமிருகங்கள் (காண்டாமிருகம்) விசேஷமாயுண்டு. காட்டுமனிதர்கள்போன்ற பெரிய வாலில்லாக் குரங்குகளும் அதிகமாயிருக்கின்றன. புலி, சிறுத்தை, கரடி முதலிய வைசாதாரணமாயுண்டு.

மாணிக்கம், இந்திரநீலம் முதலான ரத்தினங்கள் பர்மாதேசத்தில் அகப்படுகின்றன. ஐராவதி நதியோரங்களில் கிரோசின் எண்ணெய்க்கிணறுகளும் இருக்கின்றன. அத்தேசத்திலே புன்செய்தானியங்கள் மிகவும் விசேஷம்; பெரிய காடுகளிலே தேக்கு முதலிய மரங்கள் ஆகாயமளாவிப் பயிராகின்றன. நமது தேசத்தில் உபயோகமாகின்ற தேக்குமரங்கள் வெகுவாய் பர்மாதேசத்தினின்றுமே வருகின்றவை.

அத்தேசத்து வீடுகளெல்லாம் மூங்கில்களாலேயே கட்டப்பட்டு மேலே ஓலைகளால் மூடப்பட்டிருக்கின்றன. வெள்ளம்வந்து வாரிக்கொண்டுபோகுமேயெனப் பயந்து அம்மூங்கில்வீடுகள் தரைக்கு மேல் கொஞ்சம் உயர்த்தியே கட்டப்படுகின்றன. அரசனுடைய அனுமதியின்றி அங்கே ஒருவரும் கற்சுவரெடுத்து வீடுகட்டிக்கொள்ளல் கூடாது.

பர்மாவுக்கு அடுத்த ஸியம் தேசத்திலே குடிகள் வீடுகட்டிக் கொண்டிருப்பதைக் கேட்டால் இதனிலும் விசித்திரமாயிருக்கும். அங்கே பெருகுகின்ற மீனம் என்னும் நதியிலே எப்போதும் மிதந்துகொண்டிருக்கும்படியாகவே மூங்கில்களால் வீடுகட்டிக்கொண்டு வாழ்கின்றனர். சில சமயங்களிலே அவ்வீடுகள் கட்டவிழ்த்துக் கொண்டு ஆற்றிலே மிதந்து ஓடத்தலைப்படும்; அப்போது அக்காட்சியைக் காண்போர்க்கு எவ்வளவு பரிதாபமாயிருக்கும்!

பர்மாதேசத்திலே சிறந்ததான பழையகாலத்துப் புத்ததேவாலயம் ஒன்று உண்டு. அவ்வாலயம் முழுதும் தங்கமுலாம் பூசப்பட்டுப் பளபளவென்று ஜகஜ்ஜோதியாயிருக்கின்றது.

நமது இந்துதேசத்துக்கு அடுத்த தேசமாகிய இந்த பர்மாதேசத்தில் இப்பொழுது நடக்கின்றவண்ணமே முன்னேயும் இரண்டு தடவைகளில் யுத்தங்கள் நேரிட்டன; இவை அனைத்திற்கும் முக்கியமான காரணம் அத்தேசத்து அரசனது கொடுங்கோன்மையும் தனக்கு மிஞ்சினவர்கள் ஒருவருமில்லை என்கிற அகங்காரமுமேயாம்; முதல்தடவை யுத்தத்தில் அவர்கள் ஆரக்கான் முதலிய சில மாகாணங்களை இழந்தனர், இரண்டாந்தடவையில் பெகு என்னும் மாகாணத்தை இழந்தனர்.

இப்போது ஆரம்பித்திருக்கின்ற யுத்தத்திற்கும் காரணம் அத்தேசத்து அரசனது கொடுங்கோன்மையேயன்றி வேறல்ல; தீபா என்னும் அரசன் தான் பட்டத்திற்கு வந்தவுடனே தனது சிங்காதனத்திற்கு உரிமை பாராட்டத்தக்கவர் எனத் தன் புத்திக்குத் தோன்றிய

ராஜபந்துக்கள் அனைவரையும் கொல்ல நினைத்தான். அவர்களுள் சிலர் தப்பித்துக்கொண்டு அங்கிலேய ராஜ்யத்தில் அடைக்கலங்கொண்டு உயிர்தப்பினார்கள். மூன்று தினத்தில் அக்கொடிய அரசன் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாய் ராஜபந்துக்கள் எழுபது பேரைக் கொலைசெய்தான். ரங்கோனிலிருந்த கவர்னரை மூக்கிலும் வாயிலும் வெடிமருந்தைக் கெட்டித்துக் கொளுத்திவிட்டான். அவைகளைப்பற்றி அங்கிலேய துரைத்தனத்தார் எவ்வளவு எச்சரிக்கை செய்தும் அதை அவன் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. அன்றியும் அவன் பலவிதமான தீய வழிகளில் குடிகளை வருத்தித் திறை வாங்க முயன்றான். பம்பாய் தேசத்து வர்த்தகச்சங்கத்தாருக்கு மரங்களை விற்பனை செய்வதே அவ்விராஜ்யத்திற்கு பெரிய வரும்படியாயிருந்தது. தீபாவுக்கு முன்னிருந்த அரசன் அந்த வியாபாரத்தை மிகவும் ஒழுங்காகவே நடத்திவந்தான். வியாபாரமும் மேன்மேலும் விருத்தியடைந்து வந்தது. தீபா பட்டத்திற்கு வந்தவுடனே பொக்கிஷத்திலிருந்த பொருள்களை எல்லாம் அநியாயமாய்ச் செலவு செய்துவிட்டு மேற்படி வர்த்தகச்சங்கத்தாரிடம் கடன் வாங்கத் தொடங்கினான். கடைசியில் இருபத்திரண்டுலக்ஷம் ரூபாய் கடன் வேண்டுமென்று கேட்டான். அதற்கு அச்சங்கத்தார் இதுவரையில் நின்றிருக்கிற பாக்கித்தொகைக்குப் போதுமான மரங்கள் வெட்டிக்கொண்டாலன்றி மேன்மேலும் முன்பணமாகக் கடன் கொடுக்கப்படமாட்டாது என்று சொல்லி மறுத்தார்கள். அந்தக்காட்டுக் குத்தகையைப் பிரஞ்சுக்காரர்களுக்குக் கொடுப்பதாய் அவர்களுடன் ஏதோ உடன்படிக்கை செய்துகொண்டு அதன்மேலேதான் அவ்வரசன் இவ்வாறு கேள்வி கேட்டதாகத் தெரியவருகின்றது. பர்மாதேசத்து அரசன் சொல்வது சரியல்லவென்று தெரிந்து அங்கிலேய துரைத்தனத்தார், இவ்விஷயத்தில் நியாயப்படி நடத்தவேண்டுமென்று அவனைக் கேட்க, அதற்கும் அவன் சரியான சமாதானம் சொல்லாமற்போனான்.

இவ்வாறிருக்கையிலும் இந்த யுத்தத்திற்கு முக்கியமான காரணம், அவ்வரசன் அங்கிலேயரைப் பகைத்துப் பிரஞ்சுக்காரர்களுடன் நேசம் பாராட்டுகிறானென்பதேயாம். பிரஞ்சுக்காரரைத் துணைசேர்த்துக்கொண்டு அங்கிலேயரை அடக்கவேண்டுமென்பது அவனுடைய முக்கியமான அபிப்பிராயமெனத் தெளிவாய்த் தெரியலாயிற்று. அத்தன்மையான அரசன் அண்டையில் இருப்பது எப்போதும் தலைமாட்டுப் பாம்பேயல்லவா? அன்றியும் பிரஞ்சுக்காரர்களால் சீனதேசத்தாரும் அதிகமாய்த் துன்பப்பட்டிருக்கிறார்களாதலின் அத்தன்மையானவர்களுக்குப் பக்கத்தில் இடம் கொடுக்கின்ற ராஜனை எதிர்ப்பது சீனதேசத்தார்க்கும் சம்மதமேயாம். இத்தன்மையான பலகாரணங்களாலேதான் இப்பொழுது பர்மாதேசத்துச் சண்டை ஆரம்பமாகியது.

தயாளகுணமுள்ள தீரன்.

(தொடர்ச்சி.)

திலீபமகாராஜன் காமதேனுவின் மகளாகிய நந்தினியை மிகவும் பயபக்தியுடன் இருபத்தொருநாள் ஆராதித்துவந்தானென்று கூறினோமே. மறுநாள் அந்த நந்தினி இவ்வரசனது பூததயையைப் பரீக்ஷித்தறியவேண்டுமென்று நினைத்து அன்று இமயமலைச்சாரலில் கங்கைநீர் பெருகும்வழியிலே பசும்புல்லடர்ந்திருந்த குகை ஒன்றில் நுழைந்தது. நந்தினிக்கு யாதும் அபாயம் நேரிடாதென்று திடங்கொண்டவனாகையால் அதைப்பற்றிச் சிந்தைகொள்ளாமலே அரசன் அம்மலைச்சாரலிலுள்ள விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். நந்தினி அக்குகைக்குள் நுழைந்தவுடனே ஒரு சிங்கம் அதைப் பிடித்துக்கொள்ள, நந்தினி வீரிட்டது. அந்தக் கூச்சல்கேட்டதும் அரசன் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்க்கும்போது, நந்தினி சிங்கத்தின்கையில் அகப்பட்டுக் கதறிக்கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் அரசன் வில்லில் நாணேற்றிச் சிங்கத்தை அடிக்கும் பொருட்டுப் பாணம் எடுக்கவேண்டுவதற்காக அம்பறாத்தூணியில் கையைவைத்தான். வைத்தவுடனே மறுபடி எடுக்கக்கூடாமல் கை அங்கேயே உறுதியாய்ப் பற்றிக்கொண்டது. அரசன் இதுவரையில் இம்மாதிரி ஒருபோதும் அவமானப்பட்டதில்லையாகையால் இன்று புதிதாய் இத்தன்மையான அவமானம் நேர்ந்ததைப்பற்றி மனக்கவலையும் கோபமுங்கொண்டு தடைகட்டிய சர்ப்பம்போலச் சீறிக்கொண்டிருந்தான். அவனைக்கண்டு சிங்கம் புன்னகைசெய்து மனிதர்பேச்சால் பேசத்தொடங்கியது.

அரசனே, வீணே வருத்தப்படுவதில் பயனில்லை; என்பேரில் நீ பாணப்பிரயோகம்பண்ணினாலும் அது வீணாய்ப் போய்விடுமேயல்லது என்னை ஒன்றும் செய்யாது. பெருங்காற்று மரங்களைப் பிடுங்குமேயல்லது மலையை அசைக்கமாட்டுமோ? நான் பரமசிவனுடைய பரிவாரங்களில் ஒருவன்; சிவபெருமான் விருஷபவாஹனத்தின்மேலேறும்பொழுது என்முதுகிலே முதலில் ஏறி அங்கிருந்தே வாஹனத்திலேறுகிறது; என் பெயர் கும்போதரன்; இந்தக் குகையின் எதிரேயிருக்கும் தேவதாருவிருக்ஷம் பார்வதிதேவியின் கையால் தண்ணீர் வார்த்து வளர்க்கப்பட்டது, இதைப் பார்வதீ பரமேசுவரர் இருவரும் தங்கள் குழந்தைபோல் அன்புபாராட்டி ஆதரித்துவருகிறார்கள். முன்னொருநாள் காட்டானையொன்று இதில் உராய்ந்து தினவு சொரிந்துகொள்ள, அதனால் இதன் பட்டை கொஞ்சம் உரிந்துவிட்டது; அதைக்கண்ட பார்வதீ பரமேசுவரர்களிருவரும் மிகத் துக்கித்து, இனி அப்படித் துஷ்டமிருகங்கள் எதுவும் வந்து இதற்குத் தீங்குசெய்யாமல் காப்பாற்ற என்னைச் சிங்கமாக்கி

இங்கே இருக்கும்படியாகவும், அதற்கேற்க இக்குகைக்கு வரும் பிராணிகளைப் பிடித்துப் புசித்துவரும்படியாகவும் உத்தரவுசெய்து, இங்கென்னை வைத்திருக்கிறார்கள். நான் இரண்டொருநாளாய் ஆஹாரமே கிடையாமல் பசித்திருக்கிறேன்; இன்று கடவுள் இதை எனக்கு உணவாக அனுப்பியிருக்கிறார், நீ வெட்கங்கொள்ளாமல் திரும்பி உன்னிடம்போய்ச் சேர் என்றது. அதைக் கேட்ட அரசன் ஆச்சரியப்பட்டு, தனக்கு அவமானம் நேர்ந்தது சிவபிரானது பெருமையாலென்று தெரிந்து அந்தச் சிந்தையை விட்டுவிட்டு அச்சிங்கத்தைநோக்கி, சிங்கமே, என் வியாபாரம் தடைப்பட்டிருப்பதால் இப்போது நான் சொல்வது உனக்குப்பரிஹாஸமாகவே தோன்றும். ஆயினும் என் மனதிலுள்ளவைகளை நீயேயறிவாயாகையால் அதை உன்னிடம் வெளியிடுகிறேன் என்றுசொல்ல, அதன்மேல் அரசனுக்கும் சிங்கத்திற்கும் அடியில்வருமாறு ஸம்பாஷணை நடந்தது.

அரசன்: சிங்கமே, இவ்வுலகங்களைப் படைத்துக் காக்கும் பரமேசுவரன் எனக்கும் தெய்வமேயல்லவா? எனது குரு வசிட்டமுனியின் ஹோமஸாதனமான இந்த நந்தினியைக் காப்பாற்றவேண்டியது எனது கடமையாயிருக்கிறது.

சிங்கம்: சக்தியுள்ளவனாயில் காப்பாற்றவேண்டியது அவசியமே; தன்திறமை செல்லாதவிடத்தில் காப்பாற்றமுயல்வது வீணேயல்லவா?

அரசன். பரமசிவன் தேவதாருவைக் காப்பாற்றுவதன்பொருட்டல்லவோ உன்னை இங்கே வைத்திருக்கிறார். இந்தப்பசு தேவதாருவைச் சிறிதும் சேதப்படுத்தவில்லையே.

சிங்கம். இங்குவரும் பிராணிகளையே தின்று ஜீவிக்கும்படிச் சிவபெருமான் கட்டளையிட்டிருக்கிறார். நானும் இரண்டுநாளாய்ப் பசித்திருக்கிறேன்; நான் இதை விட்டுவிட்டால் என் பசி தீரும் வகையென்ன?

அரசன். அப்படியாயின் நீ என்னைப் புசித்து உன் பசியைத் தீர்த்துக்கொள். இதன் இளங்கன்று இதன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்; ஐயோ! இப்பசுவை நீ விட்டுவிடு, இது ஆச்சிரமம் போய்ச் சேர்ந்து கன்றுடனே களித்திருக்கட்டும்.

சிங்கம். (அதைக் கேட்டவுடன் குலுங்க நகைத்து) அரசனே, நீ இப்போது சொன்னதைக் கேட்க எனக்குப் பெருஞ்சிரிப்பு உண்டாகின்றது; இந்த ராச்சியசுகத்தையும் இவ்விளமையையும் இந்தச் சுகுமாரமான சரீரத்தையும் இவைபோன்ற பின்னும் பலவற்றையும் இவ்வற்பமான ஒரு பசுவுக்காக விடவேண்டுமென்று நீ நினைத்திருப்பது சிறிதும் ஆலோசியாமையால் நிச்சயித்த காரியமெனத் தோன்றுகிறது.

அரசன். இல்லை, இல்லை. அரசர்களுக்கு முக்கியமாய்ப் பூததயையே இருக்கவேண்டும்.

'பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.'
'அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு.'
'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி
னருளாதான் செய்யு மறம்.'

என முன்னோர்களும் கூறியிருக்கின்றனரல்லவா?

சிங்கம். ஆம், அரசர்களுக்குப் பூததயை இருக்கவேண்டியது அவசியமே. நீ பிரகிருதத்தில் உன் பிராணனைக் கொடுத்து இதைக் காப்பாற்ற நினைக்கிறாய். அப்படியானால் இந்த நந்தினி ஒன்றுமாத்திரமே ஜீவிக்கிறது; அவ்வாறன்றி நீ பிழைத்திருந்தாலோ வெகுநாள் அநேகம்கோடி ஜனங்களைக் காப்பாற்றுவாயன்றோ?

இந்த வார்த்தையைக் கேட்டதும் அரசன் ஏதுசொல்லுவானோ என்றும், தன்னைக் கைவிடுவானோ என்றும் பயப்படுவதுபோல நந்தினி வெருளவெருள விழித்து அரசனையே பார்த்துக்கொண்டிருந்தது.

அரசன். சிங்கமே, க்ஷத்திரியன் என்பதற்கு (க்ஷதாத் த்ராயதெ) துன்பங்களை நீக்கிக் காப்பாற்றுபவன் என்பது பொருள். அவனுக்கு இரக்கம் முக்கியமானது. அதில்லாமல் அரசனென்று பெயர்வைத்துக்கொண்டு ராஜ்யபாலனம் செய்வது வீண்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.'

பூததயையுடையவனென்கிற புகழில்லாவிடின் அவன் தன்னுயிர் காப்பவனேயல்லது மன்னுயிர் காப்பவனல்லன். இத்தன்மையான அபகீர்த்தி பெறுவதைவிட அரசன் உயிரை விட்டுவிடுவதே உத்தமமாம்.

'ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர் மரணாததிரிச்யதெ.'
'வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.'

சிங்கம். ஆம், நீ சொல்வது உண்மையே; உன் குருவினது கோபத்திற்கு நீ பயந்து பேசுவதாய்த் தோன்றுகிறது; ஆனதுபற்றியே என் வினாக்களுக்குத் தக்க விடையில்லாமல் நீ பிடித்ததையே ஒரே பிடியாய்ப் பேசுகிறாய். நீ பிழைத்திருந்தால் இவ்வொரு பசுவுக்குப்பதில் இன்னும் ஒருபடி அதிகமாய்ப் பால்கறக்கத்தக்க கோடி பெரும்பசுக்கள் கொடுத்துவிடலாம். குருவின் கோபம் அதனோடு தணிந்துவிடுமல்லவா?

அரசன். சிங்கமே, அப்படியல்ல. இந்த நந்தினி காமதேனுவின் மகள்; மகிமையில் அதற்குச்சமமானது. ஒருகோடியல்ல, இதற்குப் பதில் பலகோடி பசுக்கள்கொடுத்தாலும் அவர் கோபம் தணியாது.

சிங்கம். நீ உலகத்துக்கெல்லாம் அரசனாயிருக்கிறாய்; அநேக ராஜாக்கள் உனக்குக் கப்பங்கட்டுகிறார்கள். அன்றியும் நீ ஸார்வ

பௌமன். இவ்வாறு ஓரரசாய் உலகமெல்லாம் ஆட்சிசெய்வதற்கும் தேவேந்திரப்பட்டத்திற்கும் பூமி சம்பந்தமொன்றுதவிர வேறு எவ்விதமான வேற்றுமையுமில்லையென்று பெரியோர்கள் சொல்லுகின்றனர். இந்த ராஜபதவியில் நீ இன்னும் எவ்வளவோ சுகங்கள் அனுபவிக்கவேண்டியிருக்க இப்பசுவுக்காக உன் பிராணனை விட்டுவிடலாமா? மேலும் உனக்கு அசாத்தியமாய்விட்டதென்றும், நீ வெகுவாய் வேண்டிக்கொண்டும் நான் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் வசிட்டருக்குத்தெரியுமாகையால் அவரும் உன்மீது அதிகமாய்க் கோபம்கொள்ளமாட்டார்.

அரசன். குரு கோபம் கொள்ளுகிறார், இல்லையென்பதைப்பற்றியல்ல இப்போது யோசிப்பது. முக்கியமாய் ஒருவன் ஒன்றை ரக்ஷிக்கும்படி ஒருவனிடம் ஒப்புவித்தால், தான் காயப்படாமல் காப்பாற்றவேண்டியதைக் கைவிட்டு எஜமானன் எதிரே போய் நிற்பது மிகுந்த மதிக்கேடல்லவோ? நீயும் ஒருவனுக்குப் பரிசாரகனாகையால் இதுவிஷயம் உனக்கும் தெரிந்ததுதானே. இதைவிட இன்னும் விசேஷமாய் நான் உனக்குச்சொல்லவேண்டியதென்ன?

சிங்கம். மெய்தான், நீ என்னசொன்னாலும் உன்னைக் கொல்ல என் மனம் துணியவில்லை, உன் குணங்களைக் காண எனக்கு உன்மீது மிக்க விசுவாஸம் உண்டாகின்றது. நீ வீடுபோய்ச் சேரவேண்டுமேயன்றிச் சிங்கத்துக்கு இரையாகக்கூடாது.

அரசன். சிங்கமே, நீ அப்படிச் சொல்லுகிறது சரியல்ல, உனக்கு என்மீது தயையிருப்பது உண்மையாயின் அந்தத் தயை இவ்வெற்றுடம்பினிடத்து வேண்டாம்; எனது அழியாப் புகழுடம்பினிடத்தில் இருக்கட்டும்.

'நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக—ணீரி
லெழுத்தாகும் யாக்கை ......'

என்றபடி இந்த யாக்கை அநித்தியமென்றும், "ஜாதஸ்ய மரணம் த்ருவம்" ஜனித்தவன் மரிப்பது நிச்சயம், "நர: பதிதகாயோபி யஶ: காயேந ஜீவதி" மனிதன் மாண்டுபோனாலும் புகழுடம்புகொண்டு என்றும் பிழைத்திருக்கின்றான் என்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். நீ இந்த நிலையில்லாத சரீரத்தில் தயை செய்வதை விட்டு நிலையான புகழுடம்பில் தயைவைத்தால், நீ என்மீது மிகுந்த தயை செய்தவனாவாய். (சிங்கம் அதுகேட்டு ஒன்றும் பதில்சொல்லத் தெரியாமல் மௌனமாயிருந்தது.)

அரசன். "ஸாப்தபதீநம் மைத்ரம்" சிறிதுபொழுது கூடப் பழகுவதாலும் பேசுவதாலுமே நல்லோர் நட்பினராவரென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். நீ குணசாலியாகையாலும் இதுவரையில் என்னுடன் சம்பாஷணம் செய்தாயாகையாலும் நீ எனக்கு நட்பினனாயினாய்; இப்போது நான் உன்னை வேண்டிக்கொள்ளுகிறபடி

என்னைப் புசித்துப் பசிதீர்ந்து சுகித்திருக்கவும், நந்தினியைச் சுகமே ஆச்சிரமம்போய்ச் சேரும்படி விட்டுவிடவும் பிரார்த்திக்கிறேன் என்று வேண்டிக்கொண்டான்.

இவ்வாறு மனதில் சிறிதும் கலக்கமில்லாமல் பூததயையையே மேலாகக்கொண்டு திலீபன் பேசிய பேச்சுகளைக்கேட்டுச் சிங்கம் வெகு சந்தோஷமடைந்து அவன் வேண்டுகோளுக்கிசைந்து நந்தினியை விட்டுவிட்டது. அரசனும் அதுகண்டு அதிக சந்தோஷமடைந்து மனுநீதி முறைப்படி வில்லையும் அம்பையும் பூமியில் வைத்துவிட்டுக் குருவை நினைத்துக் கடவுளைத் துதித்துத் தனக்கு நல்லகதியுண்டாகவேண்டுமென்று தியானித்துக்கொண்டு அகமகிழ்ச்சியுடன் சிங்கம் தன்மேல் பாயும்பொருட்டுத் தலைகுனிந்து தரையில் உட்காந்தான். இவ்வரசனது பூததயைக்கு மெச்சித் தேவர்கள் உடனே ஆகாயத்தினின்றும் பூமாரிபொழிந்தார்கள்; துந்துபிவாத்தியங்களு முழக்கினுர்கள். சிங்கம் தன்மேல் துரிதமாய்ப் பாயுமென்று அரசன் சிறிதுநேரம் எதிர்பார்த்திருந்தான், பாயவில்லை. இது யாதுகாரணமோ என்று அவன் ஆலோசித்துக்கொண்டிருக்கையில் 'குழந்தாய், எழுந்திரு' என்று மெல்லிய குரலாய்ச் சத்தம் ஒன்றுகேட்டது. அரசன் எழுந்து திரும்பிப்பார்த்தான்; அங்கே சிங்கமில்லை, நந்தினி மாத்திரம் முகமலர்ச்சியுடன் நின்றுகொண்டிருந்தது. அரசன் இதென்னவென்று வியந்துகொண்டு இருக்கையில் நந்தினியானது, ராஜனே, உன் பூததயையைப் பரீக்ஷிப்பதற்காக இது நான் செய்தமாயமேயல்லது வேறல்ல; எனக்கு எந்த அபாயமும் ஒருகாலமும் நேரிடாது; மகரிஷியினது மகிமையால் யமதேவன்கூட என்னை எட்டிப்பார்க்க வல்லவனல்லன்; மற்றவர்கட்குக் கேட்பானேன். உனது இரக்கத்தையும் குருபக்தியையும் கண்டு சந்தோஷித்தேன்; உனக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக் கொடுக்க இப்பொழுது சித்தமாயிருக்கின்றேன், கேள். நான் சாதாரணமாய்ப் பால்கறக்கின்ற பசுக்களைப்போலல்ல; கேட்டதையெல்லாம் கொடுக்க வல்ல காமதேனுவென்றறி என உரைத்தது. அதைக்கேட்ட அரசன் அதிக சந்தோஷமடைந்து கைகூப்பிக்கொண்டு, தனக்கு மிகவும் பிரசித்தனாய் ஒரு குமாரன் பிறக்கவேண்டுமெனவும், அவன்முகமாய்த் தன் வம்சம் தழைத்தோங்கவேண்டுமெனவும் பிரார்த்தித்தான். அதற்கு நந்தினி அப்படியேயென்று அனுக்கிரகஞ்செய்து தன் பாலைக் கறந்து பருகும்படி கட்டளையிட்டது. அதைக்கேட்டு அரசன், மறுநாள் காலையில் கன்று ஊட்டியபிறகு கறந்து ஹோமஞ்செய்தபின்பு அந்த மிகுதிப்பாலை வசிட்டமாமுனிவர் முன்னிலையில் புசிக்க விரும்புகிறேன், அப்படியே தயைசெய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அதனால் நந்தினி அவனிடத்தில் பின்னும் அதிகமான பிரீதியுடையதாகி, அப்படியே ஆகட்டுமென்று வழக்கப்படி ஆச்சிரமத்திற்குத் திரும்பிவிட்டது. அரசனும் முன்போலவே பின்றொடர்ந்து

சென்றான். சுதக்ஷிணை எதிர்கொண்டுவந்து பூஜைசெய்தாள். அரசனது முகமலர்ச்சியாலேயே அவர்களுக்கெல்லாம் இன்று இவன்காரியம் கைகூடிற்று என்பது தெளிவாகிவிட்டது. ஆயினும் அரசனும் அங்கு நடந்தவைகளை விவரமாய் முன்னே வசிட்டமாமுனிவரிடம் விண்ணப்பஞ்செய்து, பிறகு தன் பத்தினியுடனும் சொல்லிச் சந்தோஷித்தான். வழக்கப்படி அன்றிரவு அவர்கள் அதனுடன் கூடப் படுத்திருந்தார்கள். காலையிலெழுந்து காலைக்கடன்களை முடித்து, வசிட்டமாமுனி ஹோமஞ்செய்து முடித்தபின்பு அதன் சேஷமான அமுதத்தைக் குருவின் உத்தரவுபெற்றுத் திலீபனும் சுதக்ஷிணையும் பருகினார்கள். ஆரம்பித்த விரதம் இவ்வாறு நிறைவேறியபிறகு அவர்கள் பாரணைசெய்து, அக்கினியைப் பிரதக்ஷிணம் பண்ணி, வசிட்டமுனி அருந்ததி நந்தினி இவர்களைப் பிரதக்ஷிண பிரணாமங்களால் பூசித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு அயோத்திமாநகரம் போய்ச்சேர்ந்தார்கள். அரசனைப் பிரிந்து துயரமுற்றிருந்த குடிகள் அரசன் திரும்பிவருகிற செய்திகேட்டுப் பட்டணம்முழுதும் பலவாறு அலங்கரித்து அரசனை எதிர்கொண்டு சென்று, அவனைக் கண்டவுடனே சந்திரனைக்கண்ட கடல்போலப் பொங்கிப்பேராநந்தமடைந்தார்கள். அரசன் அயோத்தியாநகரம் போய்ச் சேர்ந்ததும் ராச்சியபாரத்தை ஏற்றுக்கொண்டு முன்போலவே அரசுசெலுத்தத் துவக்கினான்.

இவ்வரசனது தயாகுணத்தைப்பற்றி இதைவிட இன்னும் அதிகமாய்ச் சொல்லவேண்டுவது வேறுண்டோ! தன்னுயிரைக் கொடுத்தாவது மன்னுயிரைக் காக்கும் இத்தன்மையான தயாகுணம் வெகு அருமையானது.

'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.'

நந்தினியின் பாலைப் புசித்த தினம்முதலாகச் சுதக்ஷிணாதேவி கருத்தரித்தவளாகிப் பத்துமாதமானபிறகு, ஐந்துகிரகங்கள் உச்சமாயும் சூரியனுடைய சேர்க்கையாகிய அஸ்ததோஷமற்றவைகளாயுமிருந்த ஒரு சுப முகூர்த்தத்தில் ஒரு நற்புதல்வனைப் பெற்றாள். அரசனும் சுதக்ஷிணையும் அப்புதல்வனுடன் சுகமாக வெகுகாலம் அரசுசெலுத்திவந்தார்கள். இவ்விளவரசனே ரகுமகாராஜன் எனப் பேர்பெற்றுத் தேசமெல்லாம் ஜயித்து விச்வஜித்து என்னும் ஒரு சிறந்த யாகம்செய்து, இப்பூமியில் தனக்கு நிகர் மற்றெவருமில்லையெனப் பிரசித்தி பெற்றவன். இவனாலேயே சூரியவம்சத்துக்கு ரகுவமிசமெனவும், அவ்வமிசத்தில் உதித்த அரசர்களுக்கெல்லாம் ரகுக்களெனவும் பெயர் வழங்கலாயின.

உலகக்கியானம்.

நாம் சிறுவர்களாய் இருக்கும்பொழுதே ஒவ்வொரு வித்தையையும் ஆவலுடன் கற்றுக்கொள்ளவேண்டும். சிலவித்தைகளினால் பிரயோஜனமில்லையென்று அவற்றைக் கற்றுக்கொள்ளாமலிருக்கக் கூடாது. "களவும் கற்று மற" என்று புலவர்கள் சொல்லியிருக்கிறார்களல்லவா? நமது வாழ்நாட்கள் முழுமையும் சரியாய்க் கவனித்து வருவோமேயானால் ஒவ்வொரு வித்தையையும் உபயோகிக்கச் சரியானகாலம் நேரிடுவதை நாம் காணலாம்.

உலகக்கியானம் எவ்வாறு உண்டாகும்.

உலகக்கியானம் என்பது உலகத்தில் பழகியே வரவேண்டுமேயல்லாமல் உள்ளே உட்காந்தபடி ஒருநாளும் வரமாட்டாது. புஸ்தகங்களைப் படிப்பதுமட்டும்போதாது; படித்தறிந்தவைகளைப் பரிசோதிக்கப் பிரஜைகளுடன் பழகியும் பார்க்கவேண்டும். இவ்விதமான பழக்கம் "இணக்கமறிந்திணங்கு" என்றபடி வெகு ஜாக்கிரதையாக நடந்துவந்தாலொழிய நமக்கு எளிதில் வரமாட்டாது. சாஸ்திரங்கள் படிப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமோ அவ்வளவு ஜாக்கிரதையாய் மனிதர்களுடன் பழகுவதிலும் நாம் இருக்கவேண்டும்.

இல்லாவிடின் நாம் நாளுக்குநாள் வயதில் உயர்வோமாகிலும் அறிவில் விருத்தியடையாமலேயிருந்துவிடுவோம். வெகு ஜனங்கள் தாடி நரைத்திருப்பார்கள்; கியானமென்பதில் பத்துவயது பாலகனுக்குக்கூட நிகரல்லாதவர்களாயிருப்பார்கள். உலகக்கியானம் நெறி நீங்கித்திரியும் சோம்பேறிகளுடைய சகவாசத்தால் உண்டாகவேமாட்டாது. ஆனால் அவர்களையும் நீ அறிந்திருக்கவேண்டியது அவசியமே. நீ நல்ல சகவாசமே எப்பொழுதும் செய்துகொண்டு இருக்கவேண்டும். நீ பழகும் ஒவ்வொருவருடைய குணாதிசயங்களையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அன்றியும் அவர்களுடைய நற்குணம், துர்க்குணம், தற்புகழ்ச்சி, வீண்பேச்சுமுதலியவைகளையும் உற்றுப்பார்க்கவேண்டும். அப்படிச் செய்வதுதான் ஈசுவரன் நமக்குப் புத்திகொடுத்திருப்பதற்குப் பிரயோஜனம்.

ஒருவனையும் இகழாதே.

ஒருமனிதன் எவ்வளவுதான் தள்ளாதவனாயும், மதிப்பற்றவனாயுமிருந்தபோதிலும் அவனும் ஒருசமயத்தில் உனக்கு ஏதாவது உதவிசெய்யும்படி நேரிடுமாகையால், நீ ஒருபொழுதும் ஒருவனையும் இகழவே இகழாதே. "சிறுதுரும்பும் பல்லுக்குத்தவுதவும்" என்ற பழமொழியின் அர்த்தம் இதுவே. நாம் ஒருவருக்கு ஒரு தீங்குசெய்

தால் வெகுவாய் அவர்கள் அதைப் பொறுக்கலாம்; இகழ்ச்சி யையோ ஒருநாளும் பொறுக்கமாட்டார்கள். ஒவ்வொருவனுடைய அகங்காரமும் அதைச் சதா மனதில் வைத்துக்கொண்டே இருக்கும். நாம் இகழவேண்டியவனுய் இருந்தபோதிலும் அதை மனதுக்குள் வைத்துக்கொள்ளவேண்டுமேயல்லாது வெளியில் காட்டக்கூடாது.

ஒருவரையும் தாழ்த்தாதே.

நம்மைவிட ஒருவன் தனம், வித்தை, அந்தஸ்துமுதலியவைக ளில் தாழ்ந்தவனுயினும் அதை நாம் வெளியில் காட்டவேகூடாது. அப்படிச் செய்வது நமது மனுஷ்யத்தனத்துக்கு மிகவும் குறைவு. கூடியமட்டும் நாம் ஒவ்வொருவரையும் நமக்குச் சரியானவர்களாக ஒவ்வொருவிஷயத்திலும் எடுத்துக்கொண்டே பேசவேண்டும். அப் படிச்செய்வது எவ்வளவு அழகு! ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தான் என்கிற எண்ணம் இருந்துகொண்டேயிருக்கும். அவனைச் சந் தோஷிப்பித்தால் அவன் நம்மிடத்தில் எவ்வளவோ பிரீதியுள்ளவனு யிருப்பான். இந்தவிஷயத்தில் நமது வாழ்நாள்முடிய நாம் ஜாக்கிர தையாயிருந்து காலம் தள்ளவேண்டும்.

ஜனங்களுடைய குற்றங்களைக் கூறுதே.

சில அற்பபுத்திகள் தன்னிடத்திலிருக்கும் குற்றங்களைக் கவனி யாமல் பிறருடைய குற்றங்களையே சங்கம்முதலான இடங்களில் உரைத்துக்கொண்டிருப்பார்கள். இது பெரிய அவலட்சணம். வாலி பர்களாயிருக்கும்பொழுது ஒவ்வொருவரிடமும் இந்தக் குணமிருப் பதுண்டு. பிறரைப் பழிப்பதால் தற்காலத்தில் நமக்கு மனதில் சந் தோஷமிருப்பினும், அது எக்காலத்திலும் ஜனங்கள் நம்மை இகழும் படி செய்துகொள்ளுவதாகும்; நமக்கு ஸ்வாமி கொடுத்திருக்கும் புத் தியைப் பிறரைப் புகழுவதிலேயே உபயோகிக்கவேண்டுமேயல்லாது அவர்கள் நம்மை வெறுக்கும்படியானவழியில் உபயோகிக்கலா காது. குமரகுருஸ்வாமிகளும் நீதிநெறிவிளக்கத்தில் இந்த அர்த்தத் தையே எடுத்துப் பாடி இருக்கிறுர்.

'பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூக்கிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.'

உன்னைப்போலப் பிறரையும் நினை.

பிறர் உள்ளத்தை அறிய நீ உன் உள்ளத்தையே சோதித்துப்பார் த்துக்கொண்டிருக்கவேண்டும். ஏனெனில், எங்கும் மனுஷசுபாவ மொன்றே. சிலரிடம் சில குணகுணங்கள் சிறப்பாய் இருப்பினும் பொதுக்குணங்களில் மனிதர்கள் ஒத்தே இருப்பார்கள். ஆகையால் எது உனக்குப்பிடிக்குமோ அது இதரர்களுக்கும் பிடிக்குமென்

றும், எது உனக்குப் பிடிக்காதோ அது அவர்களுக்கும் அப்படியே யென்றும் நம்பு. ஒருமனிதன் உன்னைப்பற்றி இகழ்ச்சியாய் ஒரு சபையில் பேசும்பொழுது உன்மனதில் உண்டாகும் வருத்தத்தைப் பரிசோதித்திருப்பாயாகில், உன் வாழ்நாள்முழுதும் நீ ஒருவனையும் இகழவேமாட்டாய். ஒருவன் உன்னை இகழும்பொழுதும், தாழ்த் தும்பொழுதும் உனக்குண்டாகும் கோபம், துயரம், துக்கம் இவை களை மனதில் வைத்துக்கொண்டிருப்பாயாகில், நீ ஏன் மற்றவர்களை இகழப்போகிறாய்.

ஒரு பரிகாசத்தால் சிநேகிதன் ஒருவனை இழந்துவிடுவது எவ்வ ளவு பெரிய நஷ்டம்! ஆனால் அப்படி ஒரு சிநேகிதனைப் பரிகாசத் தால் இழந்தாலும் இழந்துவிடலாம்; பழித்துப் பகைத்துக்கொள்ளக் கூடாது. ஒருவன் உன்னை ஒரு சபையில் இகழ்ந்துபேசினால் உன்ம னதில் எவ்வளவு வருத்தம் இருந்தபோதிலும் முதலில் கொஞ்சமே னும் காட்டிக்கொள்ளாமல் அது உன்னைப்பற்றிச் சொல்லப்படாதது போல நீ நடந்துகொள்ளவேண்டும். கொஞ்சமேனும் மறைவில்லா மல் உன்னைப்பற்றி நேராகவே சொல்லப்பட்டு எல்லாரும் உன்னைப் பார்த்துச் சிரிப்பார்களாகில், நீயும் அவர்களுடன் சேர்ந்து சிரித்துச் சொன்னவைகளெல்லாம் வெகு சரியென்று சந்தோஷமாகக்காட்டிக் கொள்ளவேண்டும்.

நேரில் மல்லுக்கு நிற்காதே.

ஒருமனிதன் உன்னைக்கெடுக்க ஆரம்பித்தால் நீ வெளியில் அவனி டத்திலே மிகவும் தாழ்ச்சியாய் இருந்து உள்ளுக்குள் அவனைத் திரும் பிக் கெடுக்க எவ்வளவு முயலவேண்டுமோ அவ்வளவும் முயலலாம். அதிகமாகச்செய்ய நமக்குச் சக்தியிருந்தாலும் செய்யலாம். இது ஒரு அவகுணமாகமாட்டாது: ஆனால் வெளியில் அவனிடம் அதிக சிநே கமாய்க் காட்டிக்கொண்டு உள்ளுக்குள் கெடுத்துக்கொண்டே வரு வோமாகில் அப்பொழுது துர்க்குணமுள்ளவர்களாவோம்.

ஒருவனையும் அதிகமாய் நம்பாதே.

என்னதான் மனிதர்கள் எல்லாரும் ஒன்றென நாம் சொன்ன போதிலும், ஒவ்வொருவர்க்குள்ளும் சில வித்தியாஸங்கள் இருக்க நாம் பரிசோதித்தால் காணலாம். யோக்கியமுள்ளவர்களும் அ யோக்கியமான காரியத்தை ஒரு சமயத்தில் செய்துவிடுகிறார்கள். அந்தஸ்துள்ளமனிதன் அற்பவிஷயங்களையும் செய்துவிடுகிறான்; நல் லவன் கெடுதியையும், கெட்டவன் நல்லதையும் ஒருசமயத்தில் செய்வதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? ஆகையால் ஒவ்வொருவ னையும் நாம் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்று ஏற்படுகிறதல்ல வா? ஒருமனிதன் தான் மிகவும் கெண்ணியமுள்ளவனென்று சொல் லிக்கொள்வான்; ஐயோ அப்படியே அவன் சொல்லிக்கொள்ளட் டும்; அதைப்பற்றி நமக்கு ஒன்றும் பொறாமைவேண்டாம். ஆனால்

அவன் சொல்வதை நம்பி நமது கைப்பொருளை அவனிடம் ஒப்பு வித்துவைப்போமேயானால் நம்மைவிடப் பெரும்மூடர்கள் இல்லை. "தன்னாயுதமும் தன்கையிற்பொருளும் பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே."

ஒவ்வொருவனையும் உற்சாகப்படுத்து.

நீ ஒரு சங்கத்திற்போய் உட்காரும்பொழுது அதிலிருக்கும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிப் பேசுவதைக்காணலாம். அதனால் நீ யாருக்கு எதில் இஷ்டமென்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதன்பேரில் எவனுக்கு எதில் இஷ்டமோ அதையே குறித்து அவனிடம் பேசுவாயானால் உன்னை அவன் தலைமேல்வைத்துக் கொண்டாடுவான். இப்படியே நீ ஒவ்வொருவனுக்கும் செய்து வருவாயானால் எல்லாருக்கும் நல்லவனாய் நீடூழிகாலம் வாழலாம்.

ஒவ்வொருவனையும் உற்சாகப்படுத்தவேண்டுமென்று சொன்னதனால் ஒவ்வொருவனையும் தப்புஸ்தோத்திரம் பண்ணவேண்டுமென்பதல்ல என்கருத்து. ஒருவனிடமிருக்கும் துர்க்குணங்களையும் குற்றங்களையும் எடுத்துக்கொண்டாடுவோமானால் நாம் குற்றவாளிகளாவோம். அதுவுமன்றி ஒவ்வொருவனும் சில சமயத்தில் தன்னைப் பற்றிக்கொண்டிருக்கும் அகங்காரத்தை யனுசரித்துப் பேசுவதனால் என்னபாதகம். இப்படி நாம் செய்தாலொழிய நாம் உலகத்தில் எல்லாருக்கும் நல்லவனாய் ஒத்துவாழ்வது முடியவேமுடியாது.

வேஷம்போடுகிறவர்களை நம்பாதே.

சிலர் வயிற்றுப்பிழைப்பிற்காகப் பலவித வேஷங்கள் போடுவார்கள். ஒருவர் தான் கீரையே சாப்பிடுகிறதென்றும், மற்றொருவர் தான் கிழங்குகளையே தின்கிறதென்றும், அன்னத்தைவிட்டு அநேக நாளாகிவிட்டதென்றும் சொல்லிக்கொண்டு திரிவார்கள். அவர்களை நீ நம்பவேவேண்டாம். அப்படி அவர்கள் இவைகளை நிஜமாகவே துறந்து இருப்பார்களேயாகில் ஏன் தற்புகழ்ச்சி செய்துகொள்ளவேண்டும். அப்பேர்ப்பட்ட மகான்கள் இருக்கவேமாட்டார்கள் என்றல்ல நான் சொல்லுவது. அப்பேர்ப்பட்டவர்களை நம்முன் காண்பது மிகவும் அரிதாகையால் இவ்வாறு பேசுகிறவர்களெல்லாம் வயிற்றுப்பிழைப்புக்காக வஞ்சகங்கள் பேசும் வேஷக்காரர்களேயன்றி வேறல்லர்.

துரௌபதி சபதம் முடித்தல்.

(தொடர்ச்சி.)

துரியோதனன் தன் சகோதரர்கள் மாண்டதை நினைத்து மாதா பிதாக்களைநோக்கிப் புலம்பலானுன் என முன் சஞ்சிகையிற் கூறினோமே. அவர்கள் அதைக்கேட்டு, மகனைப் பலவிதமாகச் சமாதானப்படுத்தினுர்கள். பிறகு திருதராஷ்டிரன், குழந்தாய், விசனப்படாதே; நீ ஒருவனுவது பிழைத்திருந்தால்போதும், தெய்வம் நமக்குப்பிரதிகூலமாகிவிட்டது; இனிமேலாவது நீ இந்தப் போர்த்தொழிலை ஒழித்துவிடலாகாதா? தர்மபுத்திரனுடைய இஷ்டப்படி சந்திசெய்துகொண்டால் எல்லோர்க்கும் சுகமுண்டே என்று சொல்ல, துரியோதனன், அப்பா நான் தம்பிமார்களுடனும் பீஷ்மதுரோணுதிகளுடனும் சுகமாயிருக்கையில் கிருஷ்ணன் நேரே சந்திபேசியும் கேளாமல் மறுத்துவிட்டு, பீஷ்மதுரோணர்களும் தம்பிமார்களும் மடிந்தபின்பு சமாதானத்துக்குப்போனுல்,தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவே சந்திசெய்ய உடன்பட்டானென்று கேட்போர் சிரியார்களா? மேலும் இத்தருணத்தில் தர்மபுத்திரன் ஜயம்பெற்றிருப்பதால் அவன்தான் சந்தியாக ஒப்புவானே? இருவரும் சமமாயிருந்தாலல்லவோ சந்தியாகும்; இப்போது நாம் தோல்வி அடைந்திருக்கிறேமே என்றான். திருதராஷ்டிரன், குழந்தாய் அப்படியல்ல, கேள்: தன் தம்பிகளில் ஒருவன் மரித்துவிட்டாலும் தான் பிராணனை வைத்திருப்ப தில்லையென்று தர்மபுத்திரன் பிரதிக்கினைசெய்திருக்கிறுன்; யுத்தத்தில் வெற்றி தோல்விகள் நியதமல்லவாகையால் எப்போது எந்த அபாயம் நேருமோ என்று அவன் பயந்துகொண்டேயிருக்கிறுன். எப்போது அழைத்தாலும் சந்திக்குவருவான் என்றுகூற, துரியோதனன், அவன் தன் தம்பிமார்களில் ஒருவன் உயிரிழந்தாலும் சகிக்கமாட்டேனென்கிறுன்; நான் என் நூறு தம்பிகளையும் சாகக்கொடுத்துவிட்டுப் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டியவனல்லவா? சரிசரி, இது நன்றுயிருக்கிறது, இது ஒருபோதும் சரிப்படாது, என்று மறுத்துவிட்டான்.

இதற்குள் யுத்தபூமியில் ஒரு பெரிய கலகல சத்தம் கேட்டது. இதென்ன என்று எல்லோரும் மயங்கிநின்றுர்கள். தந்தாய், நமக்கு இப்போது நல்லகாலமில்லை; இன்னும் ஏதாவது துயரமான சமாசாரம் காதில் கேட்பதற்குமுன்னமே நான் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று நினைக்கிறேன்; உத்தரவுகொடுக்கவேண்டும் என்று துரியோதனன் கேட்க, தகப்பனுர், குழந்தாய், சற்று நில், நீ நிச்சயமாய் யுத்தத்திற்குப் புறப்படுவதாயிருந்தாலும்,பாண்டவர்களை மறைவாய்க் கொல்லும்படி ஏதாவது உபாயம் செய்கிறுயா என்றான். அதைக்கேட்ட துரியோதனன் வெறுத்து, ஐயோ! நமது பந்துக்

களையெல்லாம் நமது கண்முன்னே அவர்கள் கொன்றிருக்க, அவர்களை நாம் மறைவாய்க் கொல்லப்பார்ப்பது அபகீர்த்திக்கு இடம்; அப்படிப்பட்டது அவர்கள் ஏதாவது செய்திருந்தாலும் நாமும் அவ்வதர்மயுத்தம் செய்யவேண்டுமா? தெய்வானுகூலத்தால் காரியம் ஆகவேண்டுமே அல்லது நம்முயற்சியில் என்ன இருக்கிறது என்று உரைத்தான். இதற்குள் பெருங்கூச்சலாய் ஓரிரைச்சல் கேட்டது. "சல்லியன் அர்ச்சுனனது பாணங்களினால் அடிபட்டுக் குதிரைகளின் கடிவாளக்கயிற்றைவிட்டு வெறுந்தேருடன் கண்ணுங்கண்ணீருமாய்த் திரும்பிவிட்டான்; குதிரைகள் தேரை இழுக்கச் சக்தியில்லாமலிருந்தும் பழக்கத்தினாலிழுத்துக்கொண்டு ஓடுகின்றன. இந்தத் துயரமான செய்தியை நாம் எப்படி அரசனுக்கு அறிவிக்கிறதென்று பயந்து மௌனமாயிருக்கக்கூடிய சமயம் இதுவன்று; உடனே நடந்தசெய்தியைத் தெரிவித்து மேல் நடக்கவேண்டியதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்" என்று யாரோ சொல்லியவார்த்தை கேட்கவே, அரசன் அதன் உண்மையைத் தெரிந்துகொண்டுவரும்படி தன் சாரதியை அனுப்பினான். அவன்போய் விசாரித்து வந்து கர்ணன் இறந்துபோன சங்கதியைத் தெரிவிக்க, அரசன் மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான்; ஸஞ்சயன் சீதோபசாரம் செய்தான்; காந்தாரி தேறுதல்சொல்லிச் சமாதானப்படுத்தினாள்.

யார் எவ்வளவு சமாதானப்படுத்தியும் கேளாமல் அவன் கர்ணனை நினைத்துக்கொண்டு பலவாறு புலம்பி மூர்ச்சையடைந்தான்; மூர்ச்சைதெளிந்து எழுந்தவுடனே கர்ணனைக் கொன்ற அர்ச்சுனனைக் கொன்றுதான் மறுகாரியம் பார்ப்பதென்று கோபாவேசங்கொண்டு போர்க்களத்திற்குப் பிரயாணப்படச் சித்தமாயினான். அத்தருணத்தில் பீமனும் அர்ச்சுனனும் ஒரே ரதத்திலேறிக்கொண்டு துரியோதனனைத் தேடிக்கொண்டுவருவதாய் அவனுடைய தேரோட்டி வந்துசொல்ல, ஆயின் அவர்களை அழைத்துவா என்றான். அவன் உடனே பீமார்ச்சுனர்களிடம் சென்று, துரியோதனமகாராஜா தம் தாய்தகப்பன்மாருடனே இவ்வாலமரத்து நிழலிலிருக்கின்றார்என்றுகூறினான்.

அர்ச்சுனன் அதுகேட்டு, கிழவர்கள் இவ்விடத்திலிருப்பதால் நம்மைப் பார்த்தவுடனே அவர்களுக்குத் துக்கம் மிகவும் அதிகமாகுமாதலின், இப்பொழுது நாம் அங்கே செல்லக்கூடாதென்று சொல்ல, பீமன், தம்பி அப்படியன்று; சமீபத்தில் வந்தமட்டும் பெரியோர்களைத் தரிசியாதுபோவது நல்லதன்று; சமீபத்திற்சென்று நாம் செய்த காரியத்தையும் பெயரையும் சொல்லிக்கொண்டே நமஸ்காரம்செய்யவேண்டுமென்று உரைக்க, இருவரும் தேரைவிட்டிறங்கிக் கிட்டப்போனார்கள். தமது குமாரனுக்குப் பரமஸகாவாகிய அங்கராஜனைக் கொன்றவன் அர்ச்சுனன் யான் வந்தனம்செய்கின்றேன் என்று சொல்லி அர்ச்சுனனும், தம் குமாரர்கள் அனைவரையும் கொன்று துச்சாஸனன் உதிரத்தைக் குடித்து மதித்து இருக்கிற பீமன் யான்

வந்தனம் செய்கின்றேன் என்று சொல்லிப் பீமனும் நமஸ்காரம் செய்தார்கள்.

அதைக்கேட்டுத் திருதராஷ்டிரன், அடா மூடா பீமா, நீ என்னவோ வீணே பிதற்றுகின்றாயே, யுத்தத்தில் பகைவனைக் கொல்வதும் அவரால் மாள்வதும் ராஜகுலத்தில் பிறந்தவர்களுக்கு இயற்கையே; நீ புதிதாய்ப் பெருமை சொல்லிக்கொள்ளும்படி இப்போது செய்ததொன்றும் காணேம் என்று கடுத்துச்சொல்ல, பீமன், மஹா பிரபுவே தாம் வேறெண்ணங்கொண்டு அடியேங்களிடத்தில் கோபம் செய்யலாகாது, ஆதிமுதல் எல்லாக் காரியங்களுக்கும் தாம் ஸாக்ஷியாயிருந்ததுபற்றித் தமக்கு இதையும் தெரிவிக்கவேண்டுமென்று சொன்னபடியே யல்லது கர்வமாய்ப் பெருமைபாராட்டிச் சொன்னபடியல்லவென்றான்.

அதைக்கேட்ட துரியோதனன், அடா மூடா, அவர்கள் துக்கமடைந்திருக்கிறார்கள்; அவர்கள்முன்னே என்னென்னவோ பிதற்றுகிறாய்; சீ, மூடா, வெட்கமில்லாதவனே. உங்கள்பெண்டாட்டியை உங்கள்முன்னே என் கட்டளையினாலே என் தம்பி தலைமயிரைப் பிடித்திழுத்து மானபங்கம்செய்தான்; அடே அதற்காகப் பேரூரில்லாத ஏழை அற்ப ராஜாக்களை அடித்தோமேயென்று வெட்கமடையவேண்டியிருக்க, வெளியில்வந்து பிதற்றுகிறது வெகுநேர்த்தி! துஷ்டா, உன்னைக் கொல்பவன் யான் இதோ இருக்கிறேன், என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்க, காந்தாரியும் திருதராஷ்டிரனும் கட்டி உட்காரவைத்தார்கள். இதனால் பீமனுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. மதிகெட்ட மூடா, இப்போது உன்னை உன் தாய்தந்தைகள் தடைசெய்யாமல் விட்டுவிடுவார்களேயானால் இந்த நிமிஷத்திலேயே துச்சாசனன் பின்னே உன்னையும் அனுப்பிவிடுவேன் என்று பீமன்கூற, அர்ச்சுனன், அண்ணா, இவன் வாயால் பேசுவது மாத்திரமே அல்லது கையால் ஒன்றும்செய்ய வல்லவனல்லன். தம்பிகள் அநேகர் மாண்டுபோன துயரத்தால் ஏதோ பிதற்றுகிறான், இதனால் என்ன என்றான். பீமனும் துரியோதனனும் ஒருவர்க்கொருவர் திரஸ்காரமாய் வாதாடிக்கொண்டிருந்தார்கள். இதற்குள் "அஸ்தமனமாகிவிட்டது, சத்துருக்கள் வெகுவாய் மடிந்துபோனார்கள். இனி இன்று யுத்தத்தை நிறுத்திவிட்டுத் தண்டுகள் கூடாரம்போய்ச் சேரவேண்டும்; யுத்தத்தில் மரித்தவர்களின் பிரேதசரீரங்களைப் பந்துக்கள் தகனாதிகள் செய்யப் பிரயத்தனம் செய்யலாம்." என்று தர்மபுத்திரர் ஆக்கினைசெய்வதாய்ச் சேவகர்கள் இவர்களுக்கு தெரிவிக்க, பீமனும் அர்ச்சுனனும் மறுபடி தேரிலேறிக் கூடாரம்போய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாள் துரியோதனன் சல்லியனுக்குச் சேனாதிபத்தியம் கொடுத்துப் பல சேனைகளைக் கூட்டி அனுப்புவிக்க, அவன் தர்மபுத்திரரால் மடிந்துபோனான். ஸஹதேவன் சகுனியைக் கொன்று

விட்டான். துரியோதனன் சைனியமெல்லாம் முற்றும் மாண்டு போய்விட்டது. கிருபர் கிருதவர்மா அசுவத்தாமா மூவரும் போன இடம் தெரியாமல் எங்கேயோ மறைவிடமாய்ப் போய்விட்டார்கள். அன்றையதினம் பொழுது போவதற்குள்ளே துரியோதனனைக் கொன்றுவிடுவதாகப் பீமன் பிரதிக்கினை செய்தான். பீமன் வெகு வாய்த் தான் செய்த பிரதிக்கினைகளை நிறைவேற்றிவிடவே; இனி அவன்முன்னே தன் உயிர் தப்பாதென நிச்சயமாய்த் தெரிந்து துரி யோதனன் ஒருவருக்கும் தெரியாமல் ஒருகுளத்தில் முழுகி மறைந் துகொண்டான். கிருஷ்ணன் பீமன் அர்ச்சுனன் மூவரும் அவனைத் தேடிக்கொண்டுசென்றார்கள். அங்கே ஒரு வேடன்வந்து ஒரு குளத் திலே தண்ணீர்க்குள் யாரோ இறங்கின அடி தெரிகிறதென்றும், கரையில் ஏறிவரவில்லையென்றும் பீமனுக்குத் தெரிவித்தான். மூவ ரும் அந்தக் குளக்கரைபோய்ச் சேர்ந்தார்கள். துரியோதனனுக்கு ஜலஸ்தம்பவித்தை தெரியுமாகையால் அவன் இதில் ஒளித்திருப் பானென்பது நிச்சயமென்று கிருஷ்ணன் சொல்ல,மூவரும் அவனைக் கண்டுபிடிக்கும்படி அக்குளக்கரையில் உட்கார்ந்தார்கள்.

பீமன், அடா வெட்கம்கெட்டவனே, நீ செய்யத்தகாத பல கொ டுந்தொழில்கள் செய்தாய்;குலத்தையெல்லாம் பாழாக்கினாய்; சகாய மாயிருந்த துச்சாஸனன் கர்ணன்முதலியவர்களையும் சாகக்கொடுத் தாய். அடா, இந்தத் தருணத்தில் வெட்கமில்லாமல் ஓடிவந்து குளத் தில் ஒளிந்துகொண்டாயே, இதுவோ வீரர்செய்வது! ஏதோ பல வீரவாதம் செய்தாயே, மூடா என்று இப்படிப் பலவிதமாகக் கடோ ரமாய்ச் சொல்ல, அதைக்கேட்டுப் பொறுக்கமாட்டாமல் துரியோத னன் ஜலத்தைவிட்டு வெளியேவந்து துஷ்டா,உனக்குப்பயந்து யான் இங்கேவந்து ஒளித்திருப்பதாக நினைத்தாயோ, இல்லை; சத்துருக் களான உங்களைக் கொல்வதற்குமுன் உங்கள்முன்னே இளைப் பாற வெட்கமாயிருந்தது; மறைவாய்ச் சற்று இளைப்பாறவந்தேன், என்று சொல்லிப் பெருமூச்சுடன் கரையில் ஏறி உட்கார்ந்தான்.

அப்போது பீமன், துரியோதனா, பாண்டவர்கள் ஐவராய் அநேக சகாயத்துடனே இருக்கிறார்களே; நான் தனியாயிருக்கிறே னே; இவர்களுடன் எப்படி யுத்தம்செய்கிறதென்று நீ கலக்கமுற வேண்டாம், எங்கள் ஐவரில் யாருடன் யுத்தம்செய்யவேண்டுமெ ன்று உனக்கு இஷ்டமோ அவருடன் யுத்தம்செய்யலாம்; மேலும் நீ எந்த ஆயுதத்துடன் யுத்தம்செய்யவேண்டும் என்று சொல்லுகிறா யோ அந்த ஆயுதத்துடனே யுத்தம் செய்கிறோம் என்று சொல்ல, துரியோதனன், பீமா, நீ துச்சாஸனனைக் கொன்றாய், அர்ச்சுனன் கர்ணனைக் கொன்றான்; எனக்கு நீங்கள் இருவரும் சரியே. ஆனா லும் நீ ஸாஹஸப் பிரியனாகையால் உன்னுடனே கதாயுத்தம் செய்ய விருப்பம்கொள்கிறேனென்று கூற, இருவரும் தங்கள் கதைக ளைச் சுழற்றிக்கொண்டு யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். பின்பு

கிருஷ்ணன், இங்கு நடந்தவைகளையும் யுத்தம் ஆரம்பமானதையும் சொல்லி, பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமக்கிரிகள் சேகரித்து வைக்கும்படி தர்மபுத்திரரிடம் பாஞ்சாலகன் என்னும் சேவகனை அனுப்பிவிட்டு, அர்ச்சுனனுடன் உட்காந்து அவர்கள் கதாயுத்தம் செய்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

இது இவ்வாறிருக்க, துரியோதனனுக்கு மிகவும் மித்திரனுகிய சார்வாகன் என்னும் இராக்கதன் தர்மபுத்திரரை வஞ்சிக்கவேண்டுமென நினைத்து, இருடிவேஷம்பூண்டு மிகவும் இளைப்புற்றவன் போலவந்து, நான் ஒரு முனிவன்; மிகக் களையாயிருக்கிறது, நாக்கு உலர்ந்துவிட்டது, கொஞ்சம் குடிக்கத் தண்ணீரும் உட்கார நிழலும் கொடுத்து ஆதரிப்பவர் யாராவதிருக்கிருர்களா என்று கேட்டுக் கொண்டே வந்தான். அதைக்கண்டு தர்மபுத்திரர் கஞ்சுகியை அனுப்பி அவனை அழைத்துவரச்செய்து, அவன் வரும்போதே நமஸ்காரம்பண்ணிக் கைகால் சுத்திசெய்ய ஜலம்கொடுப்பித்துப் பிறகு பானத்திற்கு நல்லதண்ணீரும் கொடுப்பித்தார். அவன் அதை வாங்கிக்கொண்டு இவர்களைநோக்கி, நீங்கள் க்ஷத்திரியர்கள் என்று தோன்றுகின்றதென, தர்மபுத்திரர் ஆம் என்று ஒப்புக்கொண்டார் உடனே அந்த ரிஷி, இப்போது பெரும்போர் நடக்கின்றமையால் உங்கள் பந்துக்களில் பலர் மாண்டுபோயிருப்பார்கள்; உங்கள் ஜலத்தைப் பருகலாகாது; இந்த நிழலே எனக்குப் போதுமென்று சொல்லி உட்காந்தான். துரௌபதி தன் சேடியைக்கொண்டு அவனுக்கு விசிறச்செய்தாள்.

இப்படி தவசி இளைப்பாறிக்கொண்டிருக்கையில், தாம் இவ்வளவுஇளைப்புறும்படியான காரணமென்னென்று தர்மபுத்திரர் கேட்க, அவன்,நான் தவசியாகையால் ராஜாக்கள் யுத்தம்செய்யும் வேடிக்கையைப் பார்க்கப் போகிறதுண்டு; இன்றுகாலையில் துரியோதனனும் அர்ச்சுனனும் கதாயுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அங்கே போயிருந்தேன்; வெயில்தாபம் பொறுக்கமாட்டாமல் அந்தயுத்தம் முடிவதற்குமுன்னே வந்துவிட்டேன் என்றுன். கஞ்சுகி, ஓய், துரியோதனனும் பீமனும் என்று கூறுமென்று அதட்டிச்சொல்ல, முனிவன் வெறுத்து, அடா கிழவா, நீ தெரிந்தவன்போல் ஏதோ பிதற்றுகிருயே, நான் அல்லவோ நேராய்ப் பார்த்தவன். நீ சொல்வது முன்னே நடந்தஸங்கதி, இப்போது இவர்களுக்குத்தான் யுத்தம் நடக்கிறது என்று கடுத்தவன்போலப் பேசினுன். அதைக்கேட்டுத் தர்மபுத்திரரும் துரௌபதியும் மூர்ச்சையடைந்தார்கள்.

அப்போது அந்தமனிதன் ஒன்றும் அறியாதவன்போல் இவர்கள் யார் என்று கஞ்சுகியைக் கேட்க, தர்மபுத்திரரும் துரௌபதியுமென்று அவன் சொல்லவே, ஐயோ, நாம் இவர்களுக்கு அசுபமான சமாசாரத்தைச் சொன்னேமே என்று விசாரப்படுகிறவன் போல் அபிநயம்செய்துகொண்டிருந்தான்.

தர்மபுத்திரர் மூர்ச்சைதெளிந்தெழுந்திருந்து, ஸ்வாமி, தேவரீர் என் தம்பியின் சமாசாரத்தைச் சந்தேகமாய்ச் சொல்வதால் எனக்குத் துக்கம் அதிகமாகின்றது; நிச்சயம் தெரிந்தால் பிராணனைவிட்டு விட்டாவது சுகமடையலாம் என்று உரைக்க, அவன் அதுகேட்டுத் தனக்குள்ளே ஸந்தோஷமடைந்து, தர்மா, அவசியம் சொல்லவேண்டுமானால் சொல்லுகிறேன்; துக்கசமாசாரத்தை விரிவாய்ச் சொல்லலாகாது, சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேள்: பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதாயுத்தம் ஆரம்பமாயிற்று; அங்கே பலராமர் வந்துசேர்ந்தார்; அவர் எதிரிலேயே சிறிதுநேரம் யுத்தம்நடந்தது; சற்றுநேரம் கழித்துப் பலராமர் துரியோதனன்மீது தமக்குள்ள பக்ஷபாதத்தினால் ஏதோ குறிப்புச்செய்தார்; அதைத்துரியோதனன் அறிந்துகொண்டு பீமன்மேல் தனக்குண்டாயிருந்த பகையை தீர்த்துக்கொண்டான். இப்படியானவுடனே அர்ச்சுனன் துக்கத்தினால் காண்டீவத்தைக் கீழே எறிந்துவிட்டுச் செத்துப் பூமியில் விழுந்துகிடந்த பீமன்கையிலிருந்து கதையைப் பலாத்காரமாய்ப் பிடிங்கிக்கொண்டு, எப்படியாவது ஸந்திசெய்துவிடவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு கிருஷ்ணன் யுத்தம்செய்யவேண்டாம் என்று பலமுறை சொல்லியும் கேளாமல், துரியோதனனுடன் யுத்தஞ்செய்யத் தொடங்கினான். இவ்விருவர்களுக்கும் கதாயுத்தத்திலுள்ள பயிற்சியின் தாரதம்மியம் பலராமனுக்குத் தெரியுமாகையால் அர்ச்சுனன் மடிந்துவிடுவானென்று நிச்சயித்து அர்ச்சுனன் ஸகாவாகிய கிருஷ்ணன் அங்கே இருக்கக்கூடாதென்று நினைத்து ஏதோ போக்குச்சொல்லி, கிருஷ்ணனை தம் தேர்மேலேற்றிப் பலராமன் அழைத்துக்கொண்டு போய்விட்டார். நான் திரும்பி வந்துவிட்டேன் என்று சொல்லிமுடித்தான். அதைக் கேட்டதும் தர்மபுத்திரர், அர்ச்சுனனுடைய சகோதர வாச்சல்லியத்தைப்பற்றியும், பீமன் தன் பலத்தினால் எல்லாராஜாக்களையும் ஜயித்துத் தனக்குக் கப்பம் கட்டும்படி செய்து வைத்திருப்பதைப் பற்றியும், பலராமன் அர்ச்சுனனுக்கு மைத்துனனாயிருந்தும் கிருஷ்ணனுக்கு அர்ச்சுனன் உயிர்த்தோழன் என்பதை நினையாமலும், பீமன் துரியோதனன் இருவரும் சிஷ்யராயிருக்கச் சமமாய்ப் பிரீதிபண்ணாமலும் வஞ்சனைசெய்தாரே என்பதைப்பற்றியும் பலவாறு நினைத்துத் துக்கித்துக்கொண்டேயிருந்தார்.

துரௌபதியோ முன் பீமன் தன்பிரீதிக்காகச் செய்த வியாபாரங்களையும், துரியோதனனைக்கொன்று அந்த உதிரத்தோடேவந்து தன் தலையை முடிப்பதாகச்செய்த பிரதிக்கினையையும் நினைத்துச் சிறிதுநேரம் துக்கித்துப் பின்பு தர்மபுத்திரரை நோக்கி, ஸ்வாமி, எனக்குச் சிதையேற்படுத்திக்கொடுங்கள்; நான் அக்கினிப்பிரவேசஞ்செய்து பீமனிடம்போய்ச் சேர்ந்துவிடுகிறேன்; தாம் பகைவனுடன் யுத்தத்திற்கு ஆரம்பிக்கலாம் என்று சொன்னாள். தர்மபுத்திரர் அதற்கு இசைந்து சிதை ஒன்று ஏற்பாடு செய்யும்படிக்கும்,

தனக்கு அம்பும் வில்லும் கொண்டுவந்து கொடுக்கும்படிக்கும் கஞ்சுகிக்கு உத்தரவுசெய்து, பின்பு, ஓகோ, அம்பும் வில்லும் வேண்டுவதில்லை; என்தம்பியின் கதையை எடுத்துக்கொண்டே போர்செய்து பிராணனை விட்டுவிடுகிறேன்; இனி எனக்கு ஜயமேன் என்று சொல்ல, அதைக்கேட்டு முனிவேஷக்காரன், ஜயம் வேண்டாமாகில் அங்கே போவதைவிட இங்கேயே எங்கேயாவது பிராணனை விட்டுவிடுவது நலமல்லவா என்றான். அதைக்கேட்டுக் கஞ்சுகி கோபித்துக்கொண்டு, முனிவரென்று பெயர்வைத்துக்கொண்டிருக்கிறீர், வார்த்தையைப் பார்த்தால் ராக்ஷஸனைப்போலிருக்கிறது என்று கடுகடுத்துச் சொல்ல, அவன், அப்பா நீ கோபம்கொள்ளாதே; ராஜா இப்போது மிகவும் துக்கப்பட்டிருக்கிறார், அங்கே சென்றால் இன்னும் துக்கம் அதிகமாகும் என்பதைப்பற்றி அங்கே போகவேண்டாமென்று சொன்னேனேயல்லது வேறல்ல என்றான். தர்மபுத்திரர், இவர் சொல்வது சரிதான், நான் அவ்விடம்சென்று இந்திரன் வருணன் முதலியவர்களைப்பார்க்கிலும் பராக்கிரமசாலிகளாகிய என் தம்பிமார்கள் மடிந்து பூமியில் புரளுவதையும், அவர்களை ஜயித்துச் சத்துரு மதித்து நிற்பதையும் பார்த்துப் பின்னும் பரிதபிக்க வேண்டுமோ என்று சொல்லித் தானும் துரௌபதியுடன் அக்கினிப்பிரவேசம் செய்ய நிச்சயித்துச் சிதையேற்படுத்தும்படி சொன்னார். ஒருவரும் அப்படிச் செய்யத் துணியாமல் மயங்கினார்கள்.

அதுகண்டு தருமபுத்திரர், சுவாமி, தாமே இத்தருணத்தில் எனக்குச் சகாயம்செய்யவேண்டுமென்று முனிவனை வேண்டிக்கொள்ள, அவன் தன்னிஷ்டம் நிறைவேறிற்று என்று மனதில் மகிழ்ச்சிகொண்டே, அரசே நீ சொல்லுகிறபடி தவசிகள் செய்யலாகாதே என்று சொல்லிவிட்டு, தான் அவர்களுக்குத் தெரியாமலே தீயை வளர்த்தும்பொருட்டு எழுந்திருந்து போய்விட்டான்.

இவ்வாறிருக்கத் திடீரென்று ஒரு பெரியசத்தம் கேட்டது. துரௌபதி பயந்து எழுந்து துரிதமாய் அக்கினிப்பிரவேசம் செய்யப்போகவேண்டுமென்று சொல்ல, தர்மபுத்திரர் அப்படியேயென்று எழுந்து சென்றார். மாமியாருக்கும் சக்களத்திகளுக்கும் சொல்லவேண்டியதைச் சொல்லி வேலைக்காரனை அனுப்பிவிடும்படி தர்மபுத்திரர் துரௌபதிக்குச் சொல்ல, துரௌபதி, பகன் ஹிடிம்பன் முதலிய பராக்கிரமசாலிகளையெல்லாம் கொன்ற தங்கள் இரண்டாங்குமாரர், இப்போது பரலோகம் போய்விட்டார் என்று தன் மாமியாருடனும், குழந்தை உத்தரை கர்ப்பிணியாயிருக்கிறாள், அவளைப் பத்திரமாய் ரக்ஷிக்கவேண்டும், அவள் வயிற்றில் உற்பவிக்கப்போகிற புதல்வனே நமக்குத் தர்ப்பணம்செய்யத்தக்கவன், என்று சுபத்திரையுடனும் சொல்லும்படிக் கட்டளையிட்டுச் சேடிகளை அனுப்பிவிட்டாள்.

ஆகா! பெரியவிருக்ஷங்கள் அழிந்தபின்பு ஒரு சிறுசெடியின் முளையைப்பார்த்து, இது பெரிதானபிறகு இதன் நிழலில் உட்கார

லாம் என்று வழிப்போக்கர் நினைத்துத் தேறுவதுபோலிருக்கின்றது இது என்று தர்மபுத்திரர் மனங்கலங்கி நின்றார். பிறகு இருவரும் சிதையேற்பாடுசெய்து தீவளர்த்தினார்கள். பிறகு தருமபுத்திரர் தன் மாதாவுக்கும் நகுல சகதேவர்களுக்கும் உபசாரம் சொல்லி யனுப்பிவிட்டு, தன் முன்னோர்களையெல்லாம் நினைத்துக் கடைசியாகத் தர்ப்பணம்செய்து தீக்குளிக்கச் சித்தமாகி, பீமனையும் அர்ச்சுனனையும் நினைத்துப் பலவாறு புலம்பிக்கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்கையில் போர்க்களத்திலே பீமசேனன் துரியோதனனைக் கொன்றுவிட்டு வெற்றிபெற்று அந்த உதிரத்துடனே தான் முன்செய்த பிரதிக்கினைப்படி துரௌபதியின் கூந்தலை முடிக்கவேண்டுமென்று பேரிரைச்சலாய் அட்டகாசம்செய்து துரௌபதியைத் தேடிக்கொண்டு ஓடிவந்தான். வெகுதூரத்திலிருந்து அவனைப்பார்த்த கஞ்சுகி, பீமார்ச்சுனர்களைக் கொன்றுவிட்டுத் துரியோதனனே ஓடி வருகிறானென நினைத்து அதைத் தருமபுத்திரரிடம் தெரிவிக்க, அவர் அர்ச்சுனனும் மாண்டுபோனதாயெண்ணிப் பின்னும் அதிகமாய்ப் புலம்பலானார். அச்சமயத்தில் பீமசேனன் அதிக சமீபமாக வந்து துரௌபதியைக் கண்ணுற்று, இதோ நான்வந்து உன் கூந்தலை முடிக்கிறேன் என்றுகூற, துரௌபதி பயத்தினால் அது கேளாமல் துரியோதனனென்றே நினைத்து, அவன் தன்னைப்பிடித்து மானபங்கப்படுத்துவதற்கு முன்னமே தீக்குளித்துவிடவேண்டுமென்று துரிதப்பட்டாள். அதுகண்டு தருமபுத்திரர், நீபயப்படாதே; இதோ நான் இவனைப்பிடித்துக் கொன்றுவிடுகிறேன் என்று சொல்லி, அவன் கிட்டவந்தவுடனே அவனைப்பிடித்து இறுக்கிக்கட்டிக்கொண்டு, அடாதுஷ்டா, துரியோதனா, குலத்தையழிக்க வேர்ப்புழுவாய்ப் பிறந்த கொடியோனே, இதோ நான் உன்னைக் கொன்றுவிட்டு மறுவேலைசெய்கிறேன் என்று அதிக கோபத்துடன்கூற, பீமன், தன்னை அவர் துரியோதனனென்றெண்ணிப் பயந்திருப்பதாய் அறிந்து, அண்ணா இதென்ன? துரியோதனன் இன்னும் இவ்வுலகிலிருக்கிறானோ! அவன் பெயர் ஒன்றுதவிர மற்றவையாவும் அழிந்துபோயினவென்பது தமக்குத் தெரியாதோ? அவனுடல் நாய்நரி பிடுங்கப் போர்க்களத்தில் கிடக்கின்றது. பீமசேனன் அவனைக்கொன்று துரௌபதியையும் தம்மையும் சந்தோஷிப்பிக்க இதோ வந்து நிற்கிறானென்று பலவாறு சொல்லித்தேற்ற, அவர் பலதரம் உற்றுப்பார்த்துப் பிறகு பீமனெனத் தெரிந்துகொண்டு மிகவும் மகிழ்ச்சிகொண்டு அவனைக்கட்டி அணைத்து ஆநந்தக்கண்ணீர்பெருகினார். உடனே பீமன் துரௌபதியினிடம்சென்று அவள் கூந்தலை முடித்துத் தன் பிரதிக்கினையை நிறைவேற்றினான். அச்சமயத்தில் வானவர்கள் ஆகாயத்தினின்றும் வாத்தியகோஷம்செய்து புஷ்பவருஷம் வருஷித்தார்கள்.

இதற்குள் கிருஷ்ணனும் அர்ச்சுனனுடன் அவ்விடம்வந்து தர்ம

புத்திரருக்கு மரியாதைசெய்து, பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய வையாவும் சித்தமாயிருக்கின்றன, வியாசர், வால்மீகி, ஜாபாலிமுதலிய முனிவர்களும் மற்றும் ராஜகுமாரர்களும் தமது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் சார்வாகன்ஏதோ தம்மை வஞ்சனைசெய்யவந்ததாய்க் கேள்வியுற்றுத் தம்மைப் பார்க்க ஓடிவந்தோம்; நகுலன் சார்வாகனைப் பிடித்துக்கொண்டான், என்று சொல்லி அவரைக் களிக்கச்செய்தார். பிறகு கிருஷ்ணன் கூடவே இருந்து வெகு விபவமாகத் தருமபுத்திரருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார். தர்மபுத்திரர் கிருஷ்ணனைநோக்கி, கிருஷ்ணா, தமது ஸஹாயத்தாலே நாங்கள் ஐவரும் பிழைத்தோம்;பண்ணின பிரதிக்கினைகளையும் நிறைவேற்றிக்கொண்டோம்; முக்கியமாய்த் துரௌபதியின் மனோரதம் முற்றும் நிறைவேறிவிட்டது. இனிமேலும் ஜனங்கள் தீர்க்காயுசுக்களாயிருக்கவும், ராச்சியம் நிருபத்திரவமாயிருக்கவும் தம்மிடத்தில் எங்களுக்கு பக்தி யென்றும் மாறாதிருக்கவும் அனுக்கிரகம்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். கிருஷ்ணனும் அப்படியே ஆகட்டுமென்று அனுக்கிரகித்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு துவாரகாபுரிக்கு எழுந்தருளினார்.

தருமபுத்திரர் மனுநீதிமுறை வழுவாது அரசுசெலுத்திக்கொண்டு பீஷ்மாசாரியரிடத்தில் பல தருமங்களைக் கேட்டுக்கொண்டு தம்பிமார்களுடன் திருதராஷ்டிரன் காந்தாரி இவர்களைப் பிள்ளைகளைவிடப் பதின்மடங்கு அதிகமான ஆதரவுடனே பாதுகாத்துக்கொண்டு தங்கள் தாயாகிய குந்திதேவியுடனே அஸ்தினாபுரியில் வாழ்ந்துகொண்டிருந்தார்.

சரீரசுகாதார நியமம்.

கருணைக்கடலாகிய கடவுள், அசித்துக்களோடு ஒப்பாகத் துக்கக்கடலில் ஆழ்ந்துகிடக்கும் ஜீவன்களைக்கண்டு பரிதாபமுற்று, இவை எவ்வகையிலாவது தம் மகிமைகளைத் தெரிந்துகொண்டு கடைத்தேறித் தமது பாதாரவிந்தத்தைச் சேர்தலாகிய பேரின்பத்தைப் பெற்று வாழவேண்டுமெனக் கருணைகூர்ந்து, அதற்கு முக்கிய சாதனமாய் ஜீவன் இவ்விடத்தில் வசிப்பதற்கேற்ற ஒரு சிறு வீடாக இந்தத் தேகத்தையும், பல விஷயங்களையும் தெரிந்துகொண்டு பல நற்காரியங்கள் செய்ய ஞானேந்தியகர்மேந்திரியங்களையும் அளித்திருக்கிறார். ஆயின் கடவுள் நமக்கு இந்த உடம்பையளித்தாரே யென்று இவ்வளவோடு நாம் திருப்தியடைந்து சும்மா இருக்கலாகாது. எதற்காக இவ்வுடம்பு அளிக்கப்பட்டதோ அதைத் தெளிய உணர்ந்து அக்கோரிக்கையை ஈடேற்றுவதிலேயே கருத்துடையவர்களாயிருந்தால் அப்பொழுது நாம் அவரிடத்தில் நன்றியுடையவர்களாவோம்.

இதற்கு நாம் முதன்மையாகச் செய்யவேண்டிய காரியம், கடவுள் அளித்த இவ்வுடம்பைச் சவுக்கியமாய்ப் பாதுகாப்பது. இத்தேகம் அழிந்துபோனால் அப்புறம் நாம் ஒன்றும் செய்யக்கூடாதல்லவா? சுவரிருந்தாலல்லவோ சித்திரமெழுதலாம். உதிரமாமிசங்களாலாகிய இவ்வுடம்பு நெடுநாள் நிலைபெற்றிருப்பதில்லையென்பது எல்லோர்க்கும் தெரிந்தவிஷயமே. ஒரு தேகத்துக்குக் கடவுள் சங்கற்பித்தகாலமெல்லாம் வெகு சொற்பம். அந்தச் சொற்பகாலத்திலும் நோயும்பாயுமாய்க் கிடந்தால் எந்தக் காரியமும்செய்யச் சாத்தியப்படாதன்றோ? ஆதலால் கடவுள் சங்கற்பித்தகாலம்வரையில் இத்தேகத்தைச் சவுக்கியமான நிலையில் வைத்துக்கொண்டிருப்பது நமது கடமை.

இந்தத் தேகத்தை நமக்கு அளித்த கடவுள் அது தனக்குத்தானே நிமிஷங்கூட நில்லாதென்று அதைப் போஷிப்பதற்குப் பலவிதமான உணவுகளை ஏற்படுத்தி, அவ்வுணவுகளை ஏற்றபடி உபயோகித்துவந்தால், இத்தேகத்தை நெடுங்காலம் நிலைத்திருக்கும்படி செய்யலாமென ஆயுள்வேதமூலமாய் அதற்கு வேண்டிய விதிவிலக்குகளையும் நமக்குக் காட்டியிருக்கிறார். "பசித்தன்றியருந்தோம் நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்குமிடத்தே." "மிதமறியூணினன் மிருகண்டேயன்." என ஆயுள் வேதமுறை பிறழாது உணவு ஊட்டிப் பாதுகாத்தால் இத்தேகம் என்றும் அழியாதெனவும் கூறப்படுகின்றது. அவற்றால் ஏதேனும் பிசகுநேர்ந்து நோயுண்டாகும்பக்ஷத்தில் அதைத் தீர்த்துச் சவுக்கியப் படுத்திக்கொள்வதற்கு வேண்டிய மருந்துகளும் ஆயுள்வேதத்தில் கூறப்படுகின்றனவாயினும், அவ்வாறு செய்வதனால் தேகத்துக்கு ஊனமேயொழிய வலிவில்லை; என்றும் ஒரே சீராய் வளர்வதெப்படி, அடிக்கடி நோயில் வீழ்ந்து மெலிந்து மறுபடி தேறுவதெப்படி? அன்றியும் ஒருவனுக்கு நோய் காணுமாயின் அதனால் உண்டாகும் தொல்லைகள்பல; ஆனது பற்றியே "நோயற்றவாழ்வும் குறைவற்றசெல்வமும்" என முன்னோர் கூறியிருக்கின்றனர். ஆகையால் நோயின்றி வாழ்வதற்கேற்ற வழியை நாம் தேடுவது அவசியம். அவ்வழியாவது தக்ககாலங்களில் தவறாமல் உசிதமான உணவுகளைத் தக்கவளவு அருந்திவருவதேயாம். ஏனெனில், உணவு வேண்டியவளவிற்கு அதிகரித்தாலும் குறைந்தாலும் தேகத்துக்கு ஆதாரமாகிய வாதபித்த சிலேஷ்மங்கள் தம்மளவில் மாறுபட்டு நோய்விளைவிக்கும்.

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று,"

"மிகைபடி னெஞ்சிடின் மித்திரபேதம்."

அதினும் அளவுக்கு அதிகமாகப் புசிப்பதே மிகக் கேட்டைத் தருவதாம்.

"தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்."

போஜனம்செய்வதற்குத் தகுந்தகாலத்தை நாம் எப்படித் தெரிந்துகொள்வதென்பீர்களோ? அந்த வருத்தம் நமக்கு வேண்டுவதில்லை. அதை நமக்குப் போதிக்கப் பசியையே கடவுள் ஒரு பெரிய உபாத்தியாயராய் ஏற்படுத்தியிருக்கிறார். உடம்புக்கு நாம் எப்போது உணவு ஊட்டவேண்டுவது அவசியமோ அப்பொழுது பசியென்பது ஒன்று உண்டாகி, முன் உண்டது ஜீரணமாகிவிட்டதென்பதைத் தெரிவித்துப் புதிய உணவு புகட்டும்படித் தூண்டுகின்றது. அக்காலமறிந்து புசித்துக்கொண்டு வருபவர்களுக்கு நோயுமுண்டாகாது; மருந்தும் வேண்டியதில்லை.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்."

அன்றியும் முன் உட்கொண்ட வுணவு நன்றாய் ஜீரணமானபிறகு மறுபடி ஜீரணமாவதற்குப் போதுமளவையறிந்து உண்பதே இவ்வுடம்பு நெடுநாள் நிலைத்திருப்பதற்கு ஏற்றவழியென்றும் கூறுகிறார்.

"அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு."

"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

பிரதிதினம் எத்தனைதரம் புசிக்கவேண்டுமோ அது அவரவருடைய தேகக்கூறுபாட்டுக்குத் தக்கபடி பலவிதமாயிருக்கும். எப்படியாயினும் தினம் மூன்று வேளைக்கு அதிகமாய்ப் புசிக்கக்கூடாது. இரண்டுதரம் புசிப்பதே உத்தமமானது. மூன்றுதரம் புசிப்பவர்கள், காலைப்போசனம் பொழுதுவிடிந்த ஒரு முகூர்த்தத்திற்குள்ளும், பகற்போசனம் நான்காவது முகூர்த்தத்திற்குள்ளும், இராப்போசனம் பொழுதுபட்ட இரண்டுமுகூர்த்தத்திற்குள்ளும் அருந்தவேண்டும்.

"தன்ம மிரண்டேயூண் தப்பிமுக்காற் கொள்ளினினன்
சின்மதலை காலைமுற்றற் சேர்பருவம்—நன்முகூர்த்தம்
ஒன்றுக்குள் நான்குக்கு ளோது மிரண்டுக்குள்
நன்றுக்கு தீயோர் நயந்து."

ஒருநாளைக்குச் சிறிது சிறிதாய்ப் பலதரம்புசிப்பதினும் ஒருதரமாயினும் வயிறுநிரம்பப் புசிப்பது உத்தமம். ஏனெனில் நச்சுநச்சென்று அடிக்கடி புசித்தால், முன்பாதி ஜீரணமானதும் ஆகாததுமான உணவுடன் புதிய உணவுபோய்க்கலந்து செவ்வையாய் ஜீரணமாகாமல் வயிற்றில் கோளாறு உண்டாகும். அப்படியன்றி வயிறு நிரம்பப்புசித்தால் அது ஜீரணமாகிறவரையில் மறுபடி ஆகாரத்தில் அபேக்ஷை யுண்டாகாது. இந்துக்களிலே வைதிகர்கள் அநேகர் தினம் இரண்டுதரத்துக்குமேல் ஒருபோதும் புசிப்பதேயில்லை; ஒரேதரம்

புசித்துக்கொண்டும் பலர் திடகாத்திரர்களாயிருக்கின்றனர். இந்தக் கருத்தை நோக்கியே, யோகிக்கு ஒருதாம், போகிக்கு இரண்டு தாம், ரோகிக்கு மூன்றுதாம் என்று கூறுவாருண்டு. சிறுபிராயத்தில் தேகம் வளரவேண்டியதாகையால் அந்தக்காலத்தில் இந்த நியமம் உதவாது; பசியெடுத்தபோதெல்லாம் புசிக்கவேண்டியது தான்.

காலையிலே முதல்முதல் புசிக்கின்றபோசனம் எப்போதும் திரவரூபமாகவேயிருக்கவேண்டும்; கட்டியாயிருக்கக்கூடாது; ஏனெனில், இரவெல்லாம் உணவேயில்லாமல் படுத்திருக்கிறோமாகையால் கண்டநாளம் வறண்டுபோயிருக்கும். அந்தக் கண்டநாளத்தில் கட்டியான உணவைப்போட்டால் உடனே விக்கல் உண்டாகும். அதைப் போக்குவதற்குத் தண்ணீர் பருகவேண்டும். இவ்வாறே நாள்தோறும் செய்துவந்தால் கடைசியில் நோய்க்கிடமுண்டாகும். ஆனது பற்றியே காலையில் நீராகாரம் சாப்பிடுகின்றவழக்கம் இத்தேசத்தில் அநாதியாகவருகின்றது. காலையில் போஜனம் புசிக்காத வைதிகர்களும், விடியற்காலமுதற்கொண்டு ஸ்நாநஸந்திமுதலிய நித்திய கருமங்கள் செய்யும்பொழுது சிறிதுசிறிதாய்த் தண்ணீரை உட்கொண்டு கண்டநாளத்திற்கு நமைப்புண்டாக்குகின்றனராதலின், இரவில் புசிப்பில்லாதிருப்பதனாலாகிய தீங்கு ஒன்றும் அவர்களுக்குச் சம்பவிப்பதில்லை. மற்றவர்கள் பெரும்பாலோர் இக்காலத்திலே காலையில் காப்பித்தண்ணீரும் பசுவின்பாலும் பருக வழக்கப்பட்டிருக்கிறார்க ளாதலின் அவர்களுக்கு அந்தத் தீங்கு இல்லவேயில்லை. இவ்வாறு திரவரூபமான உணவுமுதலில் உட்சென்றால், இரவில் உணவில்லாமல்துர்ப்பலமாயிருந்த உறுப்புகளெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய் வலிவுகொண்டு கெட்டியான உணவை யேற்றுக்கொண்டு ஜரிப்பிக்கத்தக்க திறமையுடையவையாகும்.

நாம் உட்கொள்ளும் உணவு ஜீரணமாவதற்கு உடம்பு வருந்த ஏதாவது சிறிது உழைப்பு எடுத்துக்கொள்ளவேண்டும். உடம்பு வருந்தாமல் வலிவுதரத்தக்க உணவுகளைமாத்திரம் புசிப்போமாயின் அவ்வுணவு செவ்வையாய் ஜீரணமாகமாட்டாது. ஏற்ற ஆகாரமில்லாமல் அதிகமாயுழைப்பதும் கூடாது; அவ்வாறு உழைத்தால் உடல் மெலிந்து வியாதி உண்டாகும்.

கடைசியாக நாம் கூறவேண்டியது ஒன்று உண்டு. எப்படிப் பட்ட தேகக்கூறு உடையவர்களாயினும் எவரும் முக்கால் வயிற்றுக்குமேல் ஒருபோதும் உணவு ஏற்றுக்கொள்ளலாகாது. அதுவும் அரைப்பங்கு சோறு கறி காய்முதலிய கெட்டியான உணவும், காற்பங்கு தயிர் பால் முதலிய திரவப்பொருளுமாயிருத்தல்வேண்டும். இம்முறைதவறுமாயின் உண்ணும் உணவு நன்றாய் ஜீரணமாகாது. வரவர அக்கினிமாந்தியமுமுண்டாகும்.

"மூக்கா லுணவின்றி யெத்தேகி கட்கு முழுவுணவில்
அக்கா ரணமன்ன சாகாதி கூடி யளாயதிற்பால்
சிக்கா வமுதம்பு தக்கிரங் காலுண்டி சேடமுழை
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் விளியுமன்றே."

வயது செல்லச்செல்லத் தேகத்தின் வலிமையும் குறைந்துகொண்டே வருமாகையால் அதற்கேற்றபடி ஆகாரத்தையும் ஒருவாறு குறைத்துக்கொண்டே வரவேண்டும். அப்படியன்றி என்றும் ஒருசீராய்ப் புசித்துவந்தால் அவ்வுணவு செவ்வையாக ஜீரணமாகாது.

இவையன்றியும் உணவுப்பொருள் விஷயத்தில் நாம் கவனிக்க வேண்டியவை பலவுள. பதார்த்தங்களில் உண்பதற்கு ஆனவையும் பலவுண்டு; ஆகாதவையும் பலவுண்டு; அன்றியும் ஒருவன் தேகத்துக்கு ஒத்துக்கொண்ட ஒருபொருள் மற்றொருவன் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாது; ஒருகாலத்தில் புசிக்கக் கூடிய பொருள்கள் மற்றொருகாலத்தில் புசிக்கக்கூடாதவையாயிருக்கும். எப்போதும் புசிக்கத்தக்கவையாயினும் பாலும் மோரும்போல ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாதவையாகிச் சேரப்புசித்தால் பெருந்தீங்கு விளைவிக்கத்தக்கவையாயிருக்கும். அவற்றின் சொரூபங்களை இங்கு எடுத்துரைக்க இடமில்லை. ஆயுள்வேதம் முதலியவற்றுள் பாக்கக்காணலாம். அததற்குரிய விதிவிலக்குகளை நன்றாய் ஆய்ந்துணர்ந்து ஒழுங்கு தவறாமல் நடந்துவருவார்களாயின் அவர்களுக்குப் பிணி முதலியவற்றால் ஒருபோதும் துன்பமுண்டாகாது.

"மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு."

சமாசாரம்.

பர்மாதேசத்திலுள்ள ஒரு அதிசயமான சமாசாரம். பர்மாதேசத்திலே கோழிகள், இராப்பகலை ஆறு பகுதியாகப் பிரித்து அத்தேசத்தவர்களுக்குப் பொழுது தெரிவிப்பவைபோல, தினந்தோறும் ஆறுதரம் கூவிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு கூவுவதற்குக் காரணம் யாதென்று அத்தேசத்தவர்களைக் கேட்டால் அவர்கள், பவுத்தமதத்தை ஸ்தாபித்தவரான கவுதமமுனிவர், ஜனங்கள் சுலபமாய்ப் பொழுது தெரிந்து கொள்ளும்படி ஒரு கிரந்தமியற்றி அதைக் கைசோர்ந்துவிட்டதாகவும், அதை எடுத்து ஒரு கோழி விழுங்கிவிட்டதாகவும், அது தெரிந்து அம்முனிவர் கோபங்கொண்டு பிரஜைகளுக்குப் பொழுது தெரிவிக்கும்படி கோழிகள் இரவும்பகலும் கூவிக்கொண்டிருக்க வேண்டுமெனச் சபித்ததாகவும் ஒரு விசித்திரமான கதை சொல்லுகிறார்கள்.

காச்மீரதேசத்து நிலைமை. காச்மீரதேசத்து நிலைமை நாளுக்குநாள் இனஸ்திதிக்குவந்துகொண்டிருக்கின்றது. கொடிய பூகம்பங்களும் கருப்புகளும் அடிக்கடி உண்டாகின்றன. அரசன் சிறிதும் ஆலோசனைத் திறமையில்லாமல் யார் எப்படியாட்டினும் அப்படி யாடிக்கொண்டிருக்கிறான். இப்பொழுது அத்தேசத்து ஜனங்கள் படுகிற கஷ்டம் இத்தன்மையதென்று சொல்லமுடியாது. முன்பு ஒருகால் அத்தேசம் தனக்கு இணையெதுவுமில்லாத சிறந்த சவுக்கிய ஸ்திதியி லிருந்தது. இனி எக்காலத்தில் அந்நிலைக்கு வந்து குடிகள் க்ஷேமப்படுவார்களோ தெரியாது.

S. P. C. K. Press, Vepery, Madras. 1886.